<u>**கம்பம் நகராட்சி**</u>

**2023-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19.04.2023-ஆம் நாள் புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

<u>**கூட்டப்பொருள்**</u>

<table>
<tr><td>1)</td><td>நகராட்சி ஆணையாளர் அவர்களின் 03/2023 -ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 268 பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>2)</td><td>நகராட்சி பொறியாளர் அவர்களின் 03/2023-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 269 பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>3)</td><td>கம்பம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-2022-ஆம் ஆண்டு திட்டத்தின்படி, ரூ.775.00 இலட்சம் மதிப்பீட்டில் 100 சதவீத மான்யத்துடன் புதிதாக வாரச்சந்தை கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள். 27.12.2021-இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று முடிவடையும் தருவாயில் உள்ளது. இதனைத் தொடர்ந்து இந்த குத்தகை இனத்திற்கு முன் தேதியிட்டு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு கோரலாம்.
<table>
<tr><td>அ)</td><td>இப்பகுதியில் உட்புறம் கட்டப்பட்டுள்ள 262 கடைகளுக்கு <u>கம்பம் வடக்கு தினசரி சந்தையாக</u> ஆண்டு குத்தகை அடிப்படையில் பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இதில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு கடை ஒன்றுக்கு 10x10ற்கு ரூ. 100/-வீதம் தினசரி வசூல் செய்திடவும், (இதர பாரம் ஏற்றி வரும் வாகனங்களுக்கு தனியே பட்டியலின்படி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது). இந்த இனத்திற்கான பொறுப்புத் தொகை ரூ,45,00,000/-மும் கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.10,00,000/- என நிர்ணயம் செய்யலாம்.</td></tr>
<tr><td>ஆ)</td><td>இச்சந்தையின் வடபுறம் காலியாக உள்ள 130x160 சதுரடி காலியிடத்திலும் சந்தையின் உட்புறம் கிழக்குபக்கம் காலியாக உள்ள 230x90 சதுரடி காலியிடத்திலும் <u>கம்பம் வாரசந்தையாக</u> ஆண்டு குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்ட பரப்பளவில் நடத்திக்கொள்ளவும், இந்த இனத்திற்கான பொறுப்புத் தொகை ரூ,15,00,000/-மும் கூடுதல் பொறுப்புத் தொகை ரூ.10,00,000/- என நிர்ணயம் செய்யலாம். மேலும் இச்சந்தையின் முன்புறம் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு எவ்வித பாதிப்பின்றி அமைக்கப்பட்ட நடைபாதையிலிருந்து (பேவர்பிளாக் தளம்) 5அடி தள்ளியே வெளிபுற வாரச்சந்தை தற்காலிக கடைகள் அமைத்துக்கொள்ளவும் இதற்கு நிர்வாகத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலிக்கவும் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>இ)</td><td>இக்கம்பம் வடக்கு தினசரி சந்தையின் தெற்குப்புறம் கட்டப்பட்டுவரும்கட்டணக்கழிப்பறைக்கு பொறுப்புத் தொகையாக ரூ.3,00,000/-மும் கூடுதல் பொறுப்பு தொகையாக ரூ.1,00,000/- என நிர்ணயம் செய்து ஆண்டுக்குத்தகை அடிப்படையில் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரலாம்.</td></tr>
<tr><td>ஈ)</td><td>இக்கம்பம் வடக்கு தினசரி சந்தையின் வெளிப்புறம் கட்டப்பட்டுள்ள 23 கடைகளுக்கு மாத வாடகை அடிப்படையில் பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இக்கடைகளுக்கு கடை ஒன்றுக்கு வைப்புத்தொகை ரூ.3,00,000/- என நிர்ணயம் செய்தும், இதில் அமையப்பெற்றுள்ள உணவகத்திற்கு வைப்புத்தொகை ரூ.5,00,000/- என நிர்ணயம் செய்தும், இதில் கட்டப்பட்டு வரும் ஏடிஎம் இயந்திர பயன்பாட்டு அறைக்கு வங்கிகளில் இருந்து பெறப்படும் ஒப்பந்த வாடகையில் கூடுதல் பெறப்படும் வாடகைத்தொகைக்கு பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் விதிமுறைகளின் படி அனுமதிக்கலாம்.</td></tr>
</table>
</td></tr>
</table>

கம்பம் வடக்கு தினசரி மற்றும் வாரச்சந்தை மற்றும் வெளிப்புறக்கடைகளின் உரிமத்திற்கான நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1) | கம்பம் வடக்கு தினசரி சந்தையில் கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தினசரி வாடகை கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். கூடுதல் தொகை வசூலிக்கக்கூடாது. |
| 2) | கம்பம் வடக்கு தினசரி சந்தையில் உட்புற கடைகளுக்கு பாரம் ஏற்றி வரும் வாகனங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும். சந்தையின் வெளிப்பகுதியில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கக்கூடாது. |
| 3) | கம்பம் வடக்கு தினசரி சந்தையில் ஒதுக்கப்பட்ட எண்ணுள்ள கடைகளை தவிர்த்து இதர இடங்களில் ஆக்கிரமிப்பு ஏதும் மேற்கொள்ளக்கூடாது. |
| 4) | கம்பம் வாரச்சந்தையில் 100 சதுரடி கடைக்கு தரை வாடகையாக ரூ.100/- மட்டும் வசூலித்திடவும், கடையின் அளவு கூடுமானால் அதற்கான கூடுதல் வாடகை கட்டணத்தினை ஒப்பந்ததாரர் எவ்வித சச்சரவிற்கும் இடமின்றி வசூல் செய்து கொள்ளலாம். |
| 5) | கம்பம் வாரச்சந்தையானது நிர்ணயிக்கப்பட்ட நாளான பிரதி செவ்வாய் கிழமை தோறும் அதிகாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடத்திக் கொள்ளவும், வாரச்சந்தை வியாபாரிகள் சந்தை கூடும் முதல் நாள் குத்தகைதாரர் முன்னிலையில் சரக்குகளை இறக்கி வைத்துக் கொள்ளலாம். |
| 6) | கம்பம் வாரச்சந்தையானது தினசரி சந்தையின் உட்புறம் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மட்டுமே நடத்திக் கொள்ளவும், இதில் சாலையோரம் அமைக்கப்படும் தற்காலிக கடைகளானது முதலில் அமைக்கப்படும் இடத்தினை, குத்தகைதாரரோ, வியாபாரிகளோ அல்லது தனிநபர்களோ உரிமை கொண்டாட கூடாது. வாரச்சந்தை நடைபெறும் நாளில் வெளிப்புறம் அமையும் கடைகளானது வாரச்சந்தை குத்தகை இனமாக கருதப்படும். |
| 7) | வாரச்சந்தை நடைபெறும் நாட்களில் வாரச்சந்தை முன்புறம் உள்ள சாலையின் (பெரியகுளம் -குமுளி சாலை மாற்று ரோடு) இருபுறமும் தென்புறம் அதாவது தம்பீஸ் தியேட்டர் வரையிலும் வாரச்சந்தையின் வடபுறம் அதாவது நகராட்சி எல்லை முடிவு வரையிலும் உள்ள எடுப்பு கடைகளின் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூலிக்கலாம். இதர நாட்களில் எடுப்பு கடைகளில் வசூலிக்க உரிமம் இல்லை. |
| 8) | அனைத்து குத்தகை மற்றும் வாடகை உரிமங்களுக்கு குத்தகைத் தொகையுடன் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட வருமானவரி, சரக்கு மற்றும் சேவைவரி, இதர அனைத்து வரியினங்களும் சேர்த்து வசூலிக்கப்படும். |
| 9) | கம்பம் வாரச்சந்தை மற்றும் வடக்கு தினசரி சந்தையானது ஒரே குத்தகை இனமாக பாவித்தோ அல்லது நிர்வாக நலனுக்கு ஏற்ப தனித்தனியாகவோ பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும். |
| 10) | தினசரி சந்தை மற்றும் வாரச்சந்தைக்கான இடம் தொடர்பாக சச்சரவுகள் ஏற்படின் சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் மற்றும் வியாபாரிகளே பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். |

மேற்படி நிபந்தனைகளுடன் பொதுஏலம் மற்றும் குத்தகை விதி முறைகளின்படியான 2021-2022 முதல் 2023-2024 வரையிலான நகராட்சியால்வெளியிடப்பட்ட பொதுஏலம்/ஒப்பந்தப் புள்ளிகளுக்கான உரிமம் அனுபவிப்பதற்கான பொதுநிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

கம்பம் வாரச்சந்தை கட்டண விகிதங்கள்

| வ.எண். | வியாபார விவரம் | கட்டண விவரம் |
|---|---|---|
| 1 | பாரம் ஏற்றிக்கொண்டு சந்தையை விட்டு வெளியேறும் லாரி ஒன்றுக்கு | 500.00 |
| 2 | 407 வேன் பாரம் ஏற்றி கொண்டு சந்தையை விட்டு வெளியேறும் வண்டி ஒன்றுக்கு | 250.00 |
| 3 | இதர (Pick up வேன், ஜீப், குட்டியானை உட்பட) பாரம் ஏற்றி கொண்டு சந்தையை விட்டு வெளியேறும் வண்டி ஒன்றுக்கு | 150.00 |
| 4 | பாரம் ஏற்றிய மூன்று சக்கர ஆட்டோ ஒன்றுக்கு வாகனக் கட்டணம் | 30.00 |
| 5 | பாரம் ஏற்றிய தள்ளுவண்டி ஒன்றுக்கு | 15.00 |
| 6 | சந்தைக்குள் வரும் கார்களுக்கு (சொந்த உபயோகம் | 50.00 |

| | | |
|---|---|---|
| | மட்டும்) | |
| 7 | காய்கறி மூடை 40 கிலோ ஒன்றுக்கு, கூடுதல் மூடைகளுக்கு கணக்கிட்டு உரிய கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம் | 20.00 |
| 8 | பலசரக்கு மூடை ஒன்றுக்கு | 20.00 |
| 9 | தேங்காய் மூடை ஒன்றுக்கு | 30.00 |
| 10 | கருவாடு மூடை ஒன்றுக்கு | 30.00 |
| 11 | எலுமிச்சை மூடை ஒன்றுக்கு | 50.00 |
| 12 | பூடு சிப்பம் 40 கிலோ ஒன்றிற்கு | 30.00 |
| 13 | மல்லி புதினா, கருவேப்பிலை , மூடை கீரைக்கட்டு ஒன்றுக்கு | 40.00 |
| 14 | தக்காளி பெட்டி 15 கிலோ பெட்டிக்கு. (கூடுதல் பெட்டிகளை கணக்கிட்டு கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்) | 15.00 |
| 15 | காலிபிளவர் மூடை 40 கிலோ ஒன்றுக்கு | 30.00 |
| 16 | மாங்காய் மூடை 50 கிலோ ஒன்றுக்கு | 30.00 |
| 17 | ஆப்பிள், மாம்பழம், மாதுளை, திராட்சை, ஆரஞ்ச் பெட்டி ஒன்றுக்கு | 40.00 |
| 18 | பழங்கள் விற்பனை செய்யும் வாகனம் (மூன்று பெட்டிகள் மட்டும் மேல் உள்ள அளவினை பொருத்து கூடுதலின்றி கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்) | 200.00 |
| 19 | கரும்புக் கட்டு ஒன்றுக்கு | 10.00 |
| 20 | திண்பண்டங்கள், பாக்குமூட்டை மூடை ஒன்றுக்கு | 50.00 |
| 21 | கருப்பட்டி, வெல்லம் 10 கிலோ கொட்டான் ஒன்றுக்கு (10 கிலோவிற்கு மேல் உள்ள அளவினை பொருத்து கூடுதலின்றி கட்டணம் வசூலித்துக் கொள்ளலாம்) | 20.00 |
| 22 | எண்ணெய் டின் ஒன்றிற்கு | 15.00 |
| 23 | தேநீர், சர்பத் கடை | 200.00 |
| 24 | எடுப்பு உணவகம் | 400.00 |
| 25 | உயிருள்ள கோழி ஒன்றுக்கு | 10.00 |
| 26 | உயிருள்ள ஆடு, மாடு ஒன்றுக்கு | 150.00 |

<u>கம்பம் வடக்கு தினசரிச்சந்தை கட்டண விகிதங்கள்</u>

| வ. எண். | வியாபார விவரம் | வரி விவரம் |
|---|---|---|
| 1 | 64 சதுரடி கடை ஒன்றுக்கு தினசரி கட்டணம். (தினசரி விற்கப்படும் பொருள்களுக்கு கட்டணம் வசூலிக்கக்கூடாது) | 100.00 |
| 2 | பாரம் ஏற்றிக்கொண்டு தினசரி சந்தையை விட்டு வெளியேறும் லாரி ஒன்றுக்கு | 500.00 |
| 3 | 407 வேன் பாரம் ஏற்றி கொண்டு தினசரி சந்தையை விட்டு வெளியேறும் வண்டி ஒன்றுக்கு | 250.00 |
| 4 | இதர (Pick up வேன், ஜீப், குட்டியானை உட்பட) பாரம் ஏற்றி கொண்டு தினசரி சந்தையை விட்டு வெளியேறும் வண்டி ஒன்றுக்கு | 150.00 |
| 5 | பாரம் ஏற்றிய மூன்று சக்கர ஆட்டோ ஒன்றுக்கு வாகனக் கட்டணம் | 30.00 |
| 6 | பாரம் ஏற்றிய தள்ளுவண்டி ஒன்றுக்கு | 15.00 |
| 7 | தினசரி சந்தைக்குள் வரும் கார்களுக்கு (சொந்த உபயோகம் மட்டும்) | 50.00 |

மேற்கண்டுள்ளவாறு கம்பம் வாரச்சந்தை மற்றும் கம்பம் வடக்கு தினசரி சந்தைக்கான கட்டணங்கள் நிர்ணயம் செய்தும், இந்த இனத்திற்கு முன்தேதியிட்ட பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கும் பொதுஏலம் (Public auction) மற்றும் குத்தகை விதிமுறைகளின்படி பொதுமக்கள் அறியும் வகையில் தினசரி நாளிதழ் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும், ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.70,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3294/2020/அ2)

**தீர்மானம் எண். 270 அனுமதிக்கப்பட்டது**

4) இந்நகர்மன்ற தீர்மான எண்.228 நாள்.25.01.2023-இல் அனுமதித்துள்ளபடி, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.35945/2011/EA2-SWM-3. நாள்.10.01.2023-ன்படி, "திடக்கழிவு மேலாண்மை திட்டம் 15வது நிதிக்குழு (வரைறுக்கப்பட்டது) – 2022-2023-இன் கீழ், ரூ.490.81 இலட்சம் மதிப்பீட்டில், கம்பம் நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி அதனை கம்பம் நகராட்சியால் குறிப்பிடும் நுண் உர செயலாக்க மையம் மற்றும் மறு சுழற்சி மையம் ஆகிய இடங்களுக்கு கொண்டுவர தனியார் நிறுவனம் மூலம் பணியாளர்களை வழங்குவதற்கு அனுமதித்துள்ளதன்படி, 24.03.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது..

மேற்காணும் பணிக்கு 24.03.2023 அன்று நடைபெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளியில் வலைதளம் (Online) வழியாக கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | M/S, RAAM & CO, Plot No.6, Thai Mookambikai, Madurai |
| 2 | M/S, Ourland Engineering works Pvt.Ltd.,Chennai |

மேற்காணும் பணிக்கு தொழில்நுட்ப பட்டியல் மட்டும் (Technical Bid) 24.03.2023 அன்று திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் ஆய்வு செய்யப்பட்டதில், மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப அடிப்படையில் தகுதி பெற்றிருந்த நிலையில், RAM & Co என்ற நிறுவனத்தார் 06.04.2023 அன்று தனது ஒப்பந்தப்புள்ளியை திரும்ப (Withdrawal) பெறுவதாக கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து ஒப்பந்ததாரரின் விலை குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி நமூனா (PriceBid) 10.04.2023 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்பட்ட விலைவிகிதம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு

| t. v© | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூ.) ஒரு டன்னுக்கு | ஒப்பந்தப்புளி கோரிய தொகை (ரூ.) ஒரு டன்னுக்கு | மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் % | குறைவு % |
| 1 | Our Land Engineering Works Pvt. Ltd,Chennai | 4222.53 | 4183.00 | -- | (-)0.94 |

**அலுவலகக்குறிப்பு :** மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற விலைவிகிதத்தில் மதிப்பீட்டை விட (-) 0.94 குறைவான விலைவிகிதம் வழங்கியுள்ள Our Land Engineering Works Pvt. Ltd Chennai என்ற நிறுவனத்தின் விலைவிகிதத்தினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 271 அனுமதிக்கப்பட்டது**

5) சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைந.க.எண்.35945/2011/EA2-SWM-3, நாள்.10.01.2023-இன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ், தனியார் நிறுவனம் மூலம் பணியாளர்களை வழங்குவதற்கு 24.03.2023 அன்று நடைபெற்ற மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை வழியாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பபட்டமைக்கு, MAA COMMUNICATION LTD, சென்னை அவர்கள் மூலம் DIPR/635/TENDER/2023 DATED: 02.02.2023 -இன்படி THE TIMES OF INDIA- TAMILNADU மற்றும் MALAI MURASU-TAMILNADU -இன்படி விளம்பர கட்டணத் தொகைக்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே விளம்பரக் கட்டண தொகை ரூ.47302/- மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.152/2023/எச்1)

**தீர்மானம் எண். 272 அனுமதிக்கப்பட்டது**

6) பொதுநிதி 2022-2023-ஆம் ஆண்டின் கீழ், கம்பம் நகராட்சி வார்டு எண்.32- நந்தகோபால்சாமி நகர் பகுதியில் அமைந்துள்ள வள மீட்பு மையத்தில் (MCC) மக்கும் குப்பையினை செயலாக்கம் செய்யும் இயந்திரம் பழுதடைந்து இயக்கமுடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் இயந்திரத்தை பழுதுநீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.35,000-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம்அனுமதிக்கலாம்.

2) மேற்காணும் செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.578/2023/இ1)

**தீர்மானம் எண். 273 அனுமதிக்கப்பட்டது**

<table>
<tr><td>7)</td><td>பொதுநிதி 2022-2023-ன் கீழ், கம்பம் நகர் வார்டு எண். 3, குரங்குமாயன் தெருவில் உள்ள பொது கழிப்பறையானது மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே மேற்காணும் பொது கழிப்பறையினை பழுது பணி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : 1) மன்றம்அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.578/2023/இ1)</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 274 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>8)</td><td>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் எண்.19009/2022/SBM-1 நாள்.25.11.2022 மற்றும் 4th SHPC ஆய்வுக்கூட்ட அறிக்கையில், உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் 9250 மெ.டன் குப்பைகளை அகற்றிட ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அனுமதியளித்துள்ளதன்படி, மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மேற்காணும் பணிகள் மேற்கொள்ள M/s, Sharvesh Constructions நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 07.03.2023-ஆம் தேதிய இவ்வலுவலக கடிதத்தில், குவித்து வைக்கப்பட்டுள்ள குப்பைகளை அளவீடு செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கிணங்க, இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களின் 10.03.2023-ஆம் தேதிய கடிதத்தில், ஒப்பந்தகாலம் முடியும் வரை தொடர்ந்து மேற்கொள்ளவும், அதற்கான ஆய்வுக் கட்டணம் உட்பட ரூ.3,54,000/- (சேவை வரி உட்பட) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் கட்டணத் தொகை ரூ.3,54,000/-ஐ இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மையம், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை அவர்களுக்கு அனுப்பும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : 1) மன்றம்அனுமதிக்கலாம்.<br>2)மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதியும், அரசின் திட்டப்பணியாதலால், பணிகள் தொய்வின்றி நடைபெறவும், நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 275 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>9)</td><td>சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம்.ந.க.எண்.17404/2022/எம்-1 நாள்.10.03.2022-இல்,1 முதல் 5-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை “ கல்வி நிதி 2022-2023-இன் கீழ், ரூ.27.00 இலட்சம் மதிப்பீட்டில் கம்பம் நகராட்சி முகைதீன் ஆண்டவர்புரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சமையற்கூடக் கட்டிடம்” கட்டுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : 1) மன்றம்அனுமதிக்கலாம்.<br>2)இப்பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் நடவடிக்கை எடுப்பதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 276 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>10)</td><td>தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021-2022-ன் கீழ், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கீழ்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணி விவரம்</th><th>மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>கம்பம் நகராட்சி வார்டு எண். 27 ஏகலுத்து சாலையில் மறவர் மக்கள் மன்றம் அருகில் சமுதாயக்கழிப்பிடம் கட்டுதல்</td><td>24.96</td></tr>
</table>
தற்போது 04.03.2023-ஆம் தேதியன்று சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கம்பம் நகராட்சியில் நடைபெறுகின்ற திட்டப்பணிகளை நேரடி ஆய்வு மேற்கொண்டதில், தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான தோற்றத்தினை கொண்டுவரும் பொருட்டு, மேற்காணும் கழிப்பறையின் முகப்பு தோற்றத்தினை மாற்றி அமைக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். எனவே பொதுநிதி 2022-2023-ன் கீழ், மேற்காணும் கழிப்பறையின் முகப்பு தோற்றத்தினை மாற்றியமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,50,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2)மேற்காணும் செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.751/2022/இ1)</td></tr>
<tr><td></td><td>தீர்மானம் எண். 277 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

11) கம்பம் நகராட்சி பொதுநிதி 2023-2024-ன் கீழ், கம்பம் நகராட்சியில், கீழ்காணும் வார்டுகளில் சாலைகள் அமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.9,20,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| t.v©. | gâæ‹ bga® | kÂ¥ÕL (%.Ïy£r¤Âš) |
|---|---|---|
| 1. | Improvement of B.T Surface at Ward No.11, Thathappankulam 15th Street, 122011R186, Ward No.33, T.T.V Nagar 5th Cross Street 122033R365, T.T.V.Nagar 3rd Cross Street 122033R363, Ward-30, Ranger Office Road 3rd Cross Street 122030R357, Ward-4, Kanapathy Mahal Road 122004R106 in Cumbum Mpty | 9.20 |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்

2)நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று, மேற்படி செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.384/2023/இ1)

**தீர்மானம் எண். 278 அனுமதிக்கப்பட்டது**

12) சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை கடிதம்.ந.க.எண். 11919/2022/CFC-1, நாள்.25.11.2022-இன் படியும், மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ந.க.எண். 3096/2022/Ã2, 20.03.2023-ஆம் தேதிய கடிதத்தின்படியும், 15வது நிதிக்குழு மான்யம் 2022-2023-ஆம் ஆண்டின் கீழ், ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில், கீழ்காணும் சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | Sankaralingam pillai street, Thathappan kulam 3rd lane, Silappathikara street, Thiyagi venkatachalam street, Kuttiah street, Jallikattu Street Main Road, Manthayamman Kovil 6th Cross Street, Thathappan Kulam 13th Lane 2nd Cross Street, Pallivasal 1 st street, Cumbumettu Road 1st Cross, Cumbumettu Road 5th Cross, Cumbumettu Colony 6th Cross Street(BT), Cumbumettu Colony 4th Cross Street(BT), Below Bus Stand 1st Cross Street, Below Bus Stand 5th Cross Street, Vellapperkoil Main Street, (Renewal BT Road), Pallivasal 2 nd street (CC Road) | Renewal BT Road & CC Road | 2.012 | 77.00 |

அலுவலகக்குறிப்பு : மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.165/2022/இ1)

**தீர்மானம் எண். 279 அனுமதிக்கப்பட்டது**

13) தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021-2022-ன் கீழ், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கீழ்காணும் பணிகள் செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

| t.v© | gâ égu« | kÂ¥ÕL bjhif (%.Ïy£r¤Âš) |
|---|---|---|
| 1. | கம்பம் நகராட்சி வார்டு எண்.14, டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள நகராட்சி வசூல் மையத்திற்கு அருகில் சமுதாயக்கழிப்பிடம் கட்டுதல். | 24.96 |

தற்போது 04.03.2023-ஆம் தேதியன்று சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கம்பம் நகராட்சியில் நடைபெறுகின்ற திட்டப்பணிகளை நேரடி ஆய்வு மேற்கொண்டதில், தமிழ்நாடு முழுவதும் ஒரே மாதிரியான தோற்றத்தினை கொண்டுவரும் பொருட்டு, மேற்காணும் கழிப்பறையின் முகப்பு தோற்றத்தினை மாற்றி அமைக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். எனவே பொதுநிதி 2022-2023-ன் கீழ், மேற்காணும் கழிப்பறையின் முகப்பு தோற்றத்தினை மாற்றியமைப்பதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.165/2022/இ1)

**தீர்மானம் எண். 280 அனுமதிக்கப்பட்டது**

14) இந்நகர்மன்றத்தீர்மான எண்.191, ehŸ. 19.12.2022-இல், பொதுநிதி 2022-2023-இன் கீழ், கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது, அதன்படி கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 25.01.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும்,முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரு இலட்சத்தல்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் % | குறைவு % |
| 1 | பொதுநிதி 2022-2023 கம்பம் நகராட்சி வார்டு எண்.21 புதிய பேருந்துநிலையத்தின் வடகிழக்கு பகுதியில் புதிதாக நகராட்சி வரிவசூல் மையக் கட்டிடம் கட்டும் பணிக்கு | 11,00,000 | M/S. A.P. Constructions, Cumbum | - | (-) 0.11 |
| | | | ஆர்.சபீர்அலி | 5.01 | - |

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட M/S, A.P. Constructions, ஒப்பந்ததாரர் (-) 0.11 சதவிகிதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 578/2022/இ1)

**தீர்மானம் எண். 281 அனுமதிக்கப்பட்டது**

15) இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 3 மாத காலத்திற்கு 01.04.2023 முதல் 30.06.2023 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.12,00,000/- (ரூபாய் பன்னிரெண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1136/2020/இ2))

**தீர்மானம் எண். 282 அனுமதிக்கப்பட்டது.**

16) **இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து** 23.09.2014 **முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள** 8 **மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட** 2022-2023-**ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம்** 30.11.2022-**இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து** 3 **மாத காலத்திற்கு** 01.04.2023 முதல் 30.06.2023 **வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும்** ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.2,31,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தி ஒன்றாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.579/2021/இ2))

**தீர்மானம் எண். 283 அனுமதிக்கப்பட்டது.**

17) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 22 வார்டுகளில் துப்புரவு பணி மேற்க்கொள்வதற்கு 67 பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3767/2019/எச்1 நாள்.27.02.2020இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணிகளை செய்து வந்த நிலையில் எதிர்வரும் 31.03.2023 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்க்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியினை மேற்க்கொண்டு வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாதத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:** 1) பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாதத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம் 2) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்ததையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண். 284 அனுமதிக்கப்பட்டது**

18) இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11 வார்டுகளில் துப்புரவு பணி மேற்க்கொள்வதற்கு 76 பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.4468/2018/எச்1 நாள்.27.02.2020இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணிகளை செய்து வந்த நிலையில் எதிர்வரும் 31.03.2023 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்க்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியினை மேற்க்கொண்டு வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாதத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு: 1) பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.04.2023 வரை ஒரு மாதத்திற்கு ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்ததையும் மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண். 285 அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 19) | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கிவரும் M/S Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3963/2018/எச்1 நாள்.27.02.2020 இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணிகளை செய்து வந்த நிலையில் எதிர்வரும் 31.03.2023 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதால் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மேற்கண்ட பணியினை மேற்கொண்டு வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.06.2023 வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : 1) பொது சுகாதார நலன் கருதி டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/S Relyon Facility Service Pvt Ltd,Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தினை 01.04.2023 முதல் 30.06.2023 வரை ஒப்பந்தம் நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.15.00 இலட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம். 2) நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்ததையும் மன்றம் ஏற்கலாம். |
| | **தீர்மானம் எண். 286 அனுமதிக்கப்பட்டது.** |
| 20) | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது டெங்கு காய்ச்சல் மற்றும் கொரோனா காய்ச்சல் அதிகம் பரவி வருவதால், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குவதற்கு தேவையான நிலவேம்பு கசாய பொடி மற்றும் கபசுர குடிநீர் பொடியினை வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மானம் எண். 287 அனுமதிக்கப்பட்டது** |
| 21) | கூடலூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தனியார் வாகனங்களின் மூலம் சேகரிக்கப்படும் நச்சு கழிவுகளை கம்பம் நகராட்சி கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் கொட்டுவதற்கும், ஒரு நடை கொட்டுவதற்கு ரூ.200/- வீதம் நிர்ணயம் செய்த தொகையினை இந்நகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மானம் எண். 288 அனுமதிக்கப்பட்டது.** |
| 22) | இந்நகராட்சி வார்டு எண் 4 செல்லாண்டியம்மன் கோவில் சாலை குறுக்கு தெரு, வார்டு 8, தாத்தப்பன் குளம் 3வது சந்து மற்றும் வார்டு 33 ஆங்கூர்பாளையம் ரோடு குறுக்குத் தெரு ஆகிய குடியிருப்பு விரிவாக்கப் பகுதிகளுக்கு குடிநீர் சீராக கிடைத்திட பகிர்மான குழாய்கள் பதிக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2023-2024-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | **தீர்மானம் எண். 289 அனுமதிக்கப்பட்டது.** |
| 23) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் குப்பைகளை அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் BOV (Battery Operator Vehicle) தற்போது 25 எண்ணிக்கையிலான BOV வாகனத்திற்கு சாதாரண பேட்டரியினை தலா 1 வாகனத்திற்கு 4 எண்ணிக்கை பேட்டரி வீதம் மொத்தம் 100 எண்ணிக்கையிலான பேட்டரிகள் வாங்கி வழங்குவதற்கு இவ்வலுவலக குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1986/2022/எச்1இன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 24.03.2023 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் அனுமதிக்கு |

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Sri Durga Batteries (1 Nos Battery) Cumbum | 8500/- |
| 2) | AMR Battery Shop ( 1 Nos Battery) Cumbum | 8900/- |

| | |
|---|---|
| | குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள Sri Durga Batteries, Cumbum நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1986/2022/எச்1) |
| | **தீர்மானம் எண். 290 அனுமதிக்கப்பட்டது** |

24) இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட 06.04.2023-ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் ஒப்பந்தப்புள்ளி வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு செய்யும் பணி | 9,90,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -0.35 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 0.36 |
| 2 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள், குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு செய்யும் பணி. | 9.80,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -0.35 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 0.37 |
| 3 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசைமோட்டார்கள் மற்றும் பொது கழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.95,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -0.10 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 1.15 |
| 4 | நகரில் 18 முதல் 33 வரை உள்ள வார்களில் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசை மோட்டார்கள் மற்றும் பொது கழிப்பறைகள் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுன் வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 9.90,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -0.10 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 1.16 |
| 5 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான கேஸ் குளோரினேசன் சிலிண்டர் வாங்குதல் | 7,45,000 | ஶ்ரீ சத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ், ஆண்டிப்பட்டி | -0.77 | |
| | | | பீபுல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ், ஆண்டிப்பட்டி. | | 0.38 |
| 6 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்ட கேஸ் குளோரினேசன் பிளான்ட்டில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 6,00,000 | ஶ்ரீ சத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ், ஆண்டிப்பட்டி | -0.40 | |
| | | | பீபுல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ், | | 1.21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆண்டிப்பட்டி. | | |
| 7 | லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் மின் தொடர்பு சாதனங்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 7,20,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -0.11 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 0.24 |
| 8) | நகரில் 33 வார்டுகளிலும் உள்ள அடி பம்புகளில் ஏற்படும்பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 1,10,000 | எல்.ராஜேந்திரன், கம்பம் | -2.35 | |
| | | | வி.கிருஷ்ணன், கம்பம் | | 4.16 |

அலுவலகக்குறிப்பு : வரப்பட்ட 8 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட, விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 291 அனுமதிக்கப்பட்டது**

25) **திரு. என்.பி. சுல்தான்சல்மான் பார்சி 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் முன்மொழியப்பட்ட கண்டனத்தீர்மானம் வருகைபுரிந்த 25 நகர்மன்ற உறுப்பினர்களால் வழிமொழியப்பட்டது.**

**இக்கம்பம் நகராட்சியில் மரியாதைக்குரிய நகர்மன்ற தலைவர் திருமதி நெ.வனிதாநெப்போலியன் அவர்களின் தலைமையில் கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற நகர்மன்ற கூட்டங்களில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் பொதுவாக வாய்ப்புகள் அளிக்கப்பட்டு சிறப்பாக நடத்தி வருவது எல்லோரும் அறிந்த ஒன்றாகும். இது நகர்மன்ற உறுப்பினர்கள் பத்திரிக்கையாளர்கள் மற்றும் வருகை தரும் பொதுமக்கள் அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் கம்பம் நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி சுனோதாசெல்வகுமார் அவர்களின் பெயரிட்ட 18.04.2023 தேதியிட்ட கடிதத்தில், கம்பம் நகர்மன்ற கூட்டம் நடைபெறும் காலத்தில் பெண்கள் ஆகிய எங்களை வெளியில் இருந்து வரக்கூடிய அடையாளம் தெரியாத நபர்கள் புகைப்படம் மற்றும் வீடியோ எடுப்பதாகவும், பெண் நகர்மன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு பயமாக உள்ளது எனத்தெரிவித்து காவல்துறை பாதுகாப்பு வழங்குமாறு தெரிவித்து, நகர்மன்றத் துணைத்தலைவர் திருமதி சுனோதாசெல்வகுமார், வார்டு எண். 7 நகர்மன்ற உறுப்பினர் திருமதி வி. சுந்தரி, வார்டு எண். 19 நகர்மன்ற உறுப்பினர் திருமதி கே. மணிமேகலை, வார்டு எண். 29 நகர்மன்ற உறுப்பினர் திருமதி ஆர்.லதா மற்றும் வார்டு எண். 14 நகர்மன்ற உறுப்பினர் ஜே. அன்புகுமாரி ஆகிய 5 நகர்மன்ற உறுப்பினர்களால் கம்பம் நகராட்சி ஆணையருக்கு நேரடியாக கடிதம் வழங்கப்பட்டுள்ளது- இதுநாள் வரை இந்நகர்மன்றத்தில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களையும் நகர்மன்றத்தலைவர் சம்மாக பாவித்து சீராக நகர்மன்ற கூட்டங்கள் நடத்தி வரும் நிலையில், ஆண், பெண் நகர்மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் ஊடகத்துறையினர் கலந்து கொள்ளும் நகர்மன்ற கூட்டம் குறித்து ஒரு பொய்யான புகாரினை பொத்தாம் பொதுவாக தெரிவித்துள்ள மேற்காணும் நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மீது கடும் கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்.**

**தீர்மானம் எண். 292 நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி. சுனோதாசெல்வகுமார், மன்ற உறுப்பினர்கள் திருமதிகள் சுந்தரிவீரபாண்டியன், (7வதுவார்டு) மணிமேகலை (19வதுவார்டு) அன்புகுமாரி (14வதுவார்டு) லதா (29வதுவார்டு) ஆகிய அனைவரும் உண்மைக்கு புறம்பான சில காரணங்களைக் குறிப்பிட்டு கடந்த 18.04.2023 கம்பம் நகராட்சி ஆணையாளருக்கு புகார் வடிவில் கடிதம் ஒன்று கொடுத்துள்ளனர். அக்கடிதத்தில் உண்மைத்தன்மை குறித்து எதேனும் ஆதாரங்கள், ஆவணங்கள் கொடுத்தால் நகர்மன்றத் தலைவர் மூலம் சட்டப்பூர்வமான அனைத்து நடவடிக்கையும் மேற்கொள்ளலாம் என ஆணையாளர் உறுதி அளித்துள்ளார். மேற்கண்ட உறுப்பினர்கள் இதனை மீறி கடந்த நகர்மன்ற கூட்டத்தில் நடந்ததாக அவர்களால் சொல்லப்படும் சம்பவம் குறித்து நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையாளர் ஆகியோர்க்குத் தகவல் தெரிவிக்காமலும் ஒப்புதல் இல்லாமலும் காவல்துறையினரை அழைத்து வந்து அலுவலக வாசலில் நின்று அலுவலகத்திற்கு அன்றாட பணிக்காக வரும் பொதுமக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள், நகர்மன்றத் தலைவர் ஆகியோர்களை கேமரா மூலம் காணொலியாக படம் பிடித்ததால்**

| | |
|---|---|
| | **அனைவருக்குமே அசௌகரியம், அவமானம், அதிருப்தி ஏற்பட்டு விட்டது. இதுகுறித்து நகர்மன்றத் தலைவர், நகராட்சி ஆணையாளர் கூட்டத்திற்கு வருகை தந்த பெரும்பான்மை உறுப்பினர்கள் (25 பேர்) ஆகியோர்கள் முன்னிலையில் மேற்கண்ட நபர்கள் அவர்கள் ஆணையாளரிடம் கொடுத்திருந்த புகார் கடிதத்தின் உண்மை தன்மை குறித்து விசாரித்த போது அது சம்பந்தமாக ஏதேனும் ஆதாரங்கள் அல்லது ஆவணங்கள் இருந்தால் அவற்றைச் சமர்ப்பித்து அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படியான விளக்கம் அளித்தால் நகர்மன்ற தலைவர் தலைமையில் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று கூடி அனைத்து சட்டப்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதாக உறுதி கூறியும் அதனை நிராகரித்த மேற்கண்ட அனைவரும் மன்றக்கூட்டத்தினை புறக்கணித்து வெளிநடப்பு செய்து விட்டனர், நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி சுனோதாசெல்வகுமார் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் திருமதிகள் சுந்தரிவீரபாண்டியன், மணிமேகலை, அன்புகுமாரி, லதா ஆகியோர்களுக்கு மன்றத்தின் சார்பில் உரிய விளக்கம் அளிக்க வாய்ப்பு வழங்கியும் அதனை நிராகரித்து மன்றத்தின் மாண்பினையும், மரபுகளையும் மீறி செயல்பட்டதோடு, உரிய வாய்ப்பு வழங்கியும் அதனை நிராகரித்து மன்றத்தின் ஏனைய பெண் உறுப்பினர்களுக்கு அவமானம் ஏற்படும் வகையில் செயல்பட்டுள்ளனர். எனவே, மேற்கண்ட தவறான புகார் அளித்த நபர்கள் அனைவரும் மற்றுமொரு வாய்ப்பாக அடுத்து வருகின்ற மாதாந்திரக்கூட்டம் நடைபெறுவதற்கு 3 நாட்களுக்கு முன்பாக நிபந்தனையற்ற முறையில் வருத்தம் தெரிவித்து எழுத்துப்பூர்வமாக நகர்மன்ற தலைவரிடம் கடிதம் அளிக்க வேண்டும் என்றும், தவறினால் அடுத்து வருகின்ற மாதந்திர கூட்டங்களில் தொடர்ந்து இரண்டு கூட்டங்களில் கலந்து கொள்ள தற்காலிகமாக தடைவிதிப்பது என வருகைபுரிந்த அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களாலும் கொண்டுவரப்பட்ட கண்டனத்தீர்மானம் அறுதிப் பெரும்பான்மையுடன் (25 உறுப்பினர்கள்) ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.** |

**ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்**
இடம் :கம்பம் நகர்மன்றத்தலைவர்
நாள்: 17.04.2023 கம்பம் நகராட்சி.